மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்

MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Era of Bharathi

Dr.M. Kavitha Devi

Assistant Professor of Tamil Aided, Nirmala College for Women, Coimbatore

Manuscript ID : **MT11A0016**

Volume : **2**

Issue : **1**

Month : **March**

Year : **2022**

Received: 11.12.2021

Revised: 06.02.2022

Accepted: 17.02.2022

Published: 03.03.2022

Pages : 23-38

ABSTRACT:

Bharathi belongs to the era of deathless. The one who declared that he had no death on earth. The one who has qualified himself in Tamil and qualified to qualify in World of Tamil. A century ends with the disappearance of Bharati. He is one hundred and thirty-nine years old. Thus this article is aimed at the study of Bharati as an epoch.

KEYWORDS:

Bharathi, Era, Death, Creativity, Society, Slogan, Poetry Pioneer, Indian Society, Foreign Language Poets, Timeless, Human Honors, Renewed Poetry, Manat Poets, Folk Songs

REFERENCES :

1. Bharathi Texts (Epics) Sri.C.Subramania Bharathi, Bharathi Publishing House, Tiruvallikeni, Chennai. Edition: 1993
2. Mahakavi and the Empress of Music Dr. M. Kalaivendan, (Editor) Tamil Aiya College, Avvaikottam, Thiruvaiyaru - 613204. Edition:July 2017
3. Bharathiyar will now make a rule Dr. M. Kalaivendan, (Editor) Tamil Iya College, Avvaikottam , Thiruvaiyaru - 613204.Edition: July 2017
4. Bharathiyar Biology and Tamil Personality Dr. M. Kalaivendan, (Editor) Tamil Aiya College, Avvaikottam, Thiruvaiyaru - 613204.Edition: July 2017
5. Bharathiyar Poems Bharathiyar, Ramayana Publishing, Tiruvallikeni, Chennai - 600005. Edition: February 2013
6. Tolkappiyam (Economics) Ilampuranar (Speaker) Tirunelveli South Indian Saiva Siddhanta Nurupathippuk Kazhagam, Chennai - 600001.Edition: June 1953.

பாரதி ஒரு சகாப்தம்

முனைவர் மு. கவிதா தேவி
உதவி பேராசிரியர்,
தமிழ்த்துறை தன்னாட்சி, நிர்மலா மகளிர் கல்லூரி, கோயம்புத்தூர்

கட்டுரைச் சுருக்கம்

சாகாவரம் பெற்ற சகாப்தத்தை உடையவன் பாரதி. புவி மீது தனக்கு மரணமில்லை என்று பறைசாற்றியவன். தமிழால் தன்னைத் தகுதிப்படுத்திக் கொண்டு தமிழைத் தரணியில் தகுதி பெற செய்தவன். பாரதி மறைந்து ஒரு நூற்றாண்டு நிறைவடைகிறது. அவன் பிறந்து நூற்றி முப்பத்தொன்பது ஆண்டுகள் ஆகின்றன. அவ்வகையில் பாரதி ஒரு சகாப்தம் என்ற ஆய்வு தலைப்பில் இக்கட்டுரை நோக்கப்பட்டுள்ளது.

கருச்சொற்கள்

பாரதி, சகாப்தம், சாகாவரம், படைப்பு, சமுதாயம், முழக்கம், கவிதை முன்னோடி, பாரத சமுதாயம், பிறமொழிக் கவிஞர்கள், காலம் கடந்தவன், மனித மாண்புகள், புதுக்கவிதை, மேனாட்டுக் கவிஞர்கள், நாட்டுப்புறப் பாடல்களில் பாரதி

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற காவியம் மகாகவி பாரதியார். "நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்குழைத்தல், இமைபொழுதும் சோராதிருத்தல்" (பாரதியார் கவிதைகள், விநாயகர் நான்மணிமாலை, பா.எ.1:25) என்னும் குறிக்கோளோடு வாழ்ந்து நம் உள்ளத்தில் நிறைந்திருப்பவர்.

பாரதியின் விடுதலைப்போர் முக்கியப் பங்கு வகிக்கிறது. சமுதாய விடுதலை, சமதர்ம விடுதலை, சாதிமத பேதமில்லாமல் அனைவருக்கும் பொதுவான சமுதாயம். இந்தியா சுதந்திரம் அடைந்த பின்பு "அச்சமில்லை; அமுங்குதலில்லை; நடுங்குதலில்லை; பதுங்குதலில்லை; எது நேரினும் இடர்ப்படமாட்டோம்; எதற்கும் அஞ்சோம்; எப்போதும் அஞ்சோம்" (பாரதியார் கவிதைகள், விநாயகர் நான்மணிமாலை, பா.எ.1:24) என்று அச்சமின்றி அறிவை விரிவு செய்து வாழக் கற்றுத் தந்தவர். எழுத்துக்கும், வாழ்க்கைக்கும் மத்தியில் சுவர் எழுப்பிக் கொள்ளாத சுத்தக் கவிஞன் பாரதி. அவருடைய படைப்புகள் சாகாவரம் பெற்ற சகாப்தங்கள், மனித மாண்புகள் ஓங்கவேண்டுமென விரும்பியவர். இக்கட்டுரையில் பாரதியாரின் கவிதைகள், பத்திரிக்கைப்பணி, நூல்கள் வெளியீடு, பாரதிக்குச் செய்த சிறப்புகள் என்ற

கருத்தமைப்பின் அடிப்படையில் 'பாரதி ஒரு சகாப்தம்' என்ற ஆய்வுகட்டுரையாக வடிவமைக்கப்பட்டு நோக்கப்பட்டுள்ளன.

மகாகவி சுப்ரமணிய பாரதியார் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர். எந்தையும், தாயும் மகிழ்ந்து குலாவிய பாரத நாட்டில் சாதி வேறுபாடு அகன்றிட சமுதாயம் சீர் பெற்றிட எல்லோரும் சமநிலை பெற்றிட கனவு கண்டவர்; கண்ட கனவினைக் கவிதையாக்கியவர். கவிதைத் தொழிலில் சிறந்து விளங்கி பல்துறை புலமை பெற்றார். அனைத்து மக்களையும்

"திறமை கொண்ட தீமையற்ற
தொழில் புரிந்து யாவரும்
தேர்ந்த கல்வி ஞானம் எய்தி
வாழ்வோர் இந்த நாட்டிலே"

(பாரதியார் கவிதைகள், விடுதலை, பா.எ.1)

என்று முழக்கமிடுவதைக் காணமுடிகிறது.

ஆய்வுக்களங்கள்

தன்னைத் தமிழால் தகுதி பெறச் செய்வதும் தன்னால் தமிழைத் தகுதிபெறச் செய்வதும் தமிழ்ச்சான்றோர்களின் வழக்கு. தன்னைப் பண்படுத்தி வளர்த்துக்கொண்டு தமிழைத் தன்னால் தகுதி பெறச் செய்தவன் பாரதி. ஒருநூற்றாண்டு சகாப்தத்தின் ஈடு இணையற்ற கவிஞன்; காவியம் படைத்தவன். இயல், இசை, நாடகம் என முத்தமிழையும் வளர்த்தவன். தேசியக்கவிஞன். பன்மொழி வித்தகன். ஐரோப்பிய மொழி இலக்கியங்களைத் தமிழுக்குக் கொணர்ந்த நவீன இலக்கியவாதி. படைப்பாளன் மட்டுமல்ல, பத்திரிகையாளன், சுதந்திரப் போராட்டப் போராளி, மொழிபெயர்ப்பாளன், நன்றாக சுத்தத் தாளத்தோடு பாடக்கூடிய இசைஞானம் கைவரப் பெற்ற கலைஞன். இந்தியா என்ற ஒருமித்த கனவிற்குப் பாரத சமுதாயத்தைப் படைத்தவன். அவ்வகையில் 'புவி மீது நான் சாகாதிருப்பேன் பாரீர்!' என்று கூறி இன்றுவரை பாரதி கவிதை இல்லாமல் தமிழ்மொழி இல்லை; தமிழ்மொழி இல்லாமல் பாரதி இல்லை. நான்கு தலைமுறை கடந்துவிட்டோம். பாரதியின் படைப்புகள் குறித்த ஆய்வுகள் நீள்பார்வைக்கு வைக்கப்பட்டுக் கொண்டே உள்ளன.

பாரதி கவிதையின் முன்னோடி

தமிழ்மொழியின் வளர்ச்சிக்குக் கவிதை மறுமலர்ச்சிக்கும் தடையாக இருந்தவற்றை எல்லாம் தகர்ந்திடும் வகையில் எழுச்சிக் கவிதைகள் புதைந்து

இலக்கியத் தொண்டாற்றித் தமிழுக்கு புதுநெறி காட்டிக் கவிதையுலகில் விடிவெள்ளியாய்த் திகழ்ந்தவர். பாரதியார் புதுக்கவிதையுலகில் மட்டுமன்றி கட்டுரை, நாவல், சிறுகதை, கேலிச்சித்திரம், இசை அரசியல், தேசீயம் எனப் பல்வேறு துறைகளில் மிளிர்ந்தவர். அவற்றின் தடங்களை அனுபவித்த கண்ணதாசன் குறிப்பிடும்போது,

"ஆன்ற கவிஞர் அனைவோர்க்கும் முன்முதலாம்
தோன்றும் கவிதைச் சுடரொளியே நீ வாழ்க எங்கே தமிழனென -
எங்கே தமிழென்று என் தமிழர் தேடுகையில்
இங்கே தமிழென்று எடுத்து வந்தோ நம் தமிழுக்கு"

(பாரதியார் வாழ்வியலும் தமிழ் ஆளுமையும், ப.எ.270)

என்று கவிஞர் கண்ணதாசன் வாழ்த்தியதில் பாரதியின் பெருமையையும் கவிதைப் புலமையையும் அறியமுடிகிறது.

பழமைக்கும், புதுமைக்கும் பாலமாகத் திகழ்ந்தவர். பாமர மக்கள் ஏற்கும் வண்ணம் அரிய பதங்கள், எளியநடை, எளிதில் அறியக் கூடிய சந்தம், பொதுமக்கள் விரும்பும் இசை ஆகியவற்றைக் கொண்டு இலக்கியம் படைத்தவர். தம்முடைய கவிதைகளில் கவிதையின் பாங்கை உணர்த்த முற்படும்போது

"சுவைபுதிது பொருள்புதிது வளம்புதிது
சொற்புத்து சோதிமிக்க நவகவிதை
எந்நாளும் அழியாத மாகவிதை"

(பாரதி நூல்கள்,
எட்டையபுர மகாராசாவிற்கு எழுதிய ஓலைத்தூக்கு, பா.எ.1:3)

என்று மகிழ்ச்சியோடு குறிப்பிடுவதிலிருந்து அறியமுடிகிறது.

ஒன்பான் சுவையுடைய பாரதியின் புதுக்கவிதை

தொல்காப்பியம் குறிப்பிடும் மெய்ப்பாட்டியல் நூற்பாவின்படி எண்சுவையை குறிப்பிடுகிறது. அவற்றோது நடுவுநிலைமை என்னும் சுவையோடு ஒன்பான் சுவையுடையதாகப் பாரதியின் புதுக்கவிதை திகழ்கின்றதென்பதைக் காணமுடிகிறது.

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகைஎன்று
அப்பால் எட்டே மெய்ப்பா டென்ப"

(தொல்காப்பியம், பொருள், நூ.எ.247)

என்ற நூற்பாவின் முதல் சுவையான நகையை எடுத்துக் கொண்டு காணும்போது இந்திய மக்களின் அறிவிலித்தனத்தைக் கண்டு துன்புற்று விரக்தியில் நகைக்கிறார்.

“கஞ்சி குடிப்பதற்கில்லார் அதன்
காரங்கள் இவையென்னும் அறிவுமிலார்
பஞ்சமோ பஞ்சம் என்றே நிதம்
பரிதவித்தே உயிர் துடிதுடித்தே
.......................................”

(பாரதியார் கவிதைகள்,
பாரத ஜனங்களின் தற்கால நிலை, பா.எ.6)

இந்திய மக்களின் அறிவிலிகளைக் கண்டு நொந்து நகைக்கிறார்.

அழுகை

பாஞ்சாலி சபதம் என்ற குறுங்காப்பிய நாடகத்தில் அவலத்தின் உச்சத்தில் பாஞ்சாலியின் உணர்வாக அழுகையெனும் சுவை வெளிப்படுகிறது.

“பெண்டீர் தமையுடையீர் பெண்களுடன் பிறந்தீர்
பெண்பாவமன்றோ? என்ற கையெடுத்து கும்பிட்டாள்
அம்புபட்ட மான்போல அழுதுதுடிதுடித்தாள்”

(பாரதியார் கவிதைகள்,
பாஞ்சாலி சபதம், பா.எ.271 (86-90))

என்ற பாடலில் பாஞ்சாலியின் அழுகை பெண் குலத்திற்கு இழைக்கப்படும் அநீதி.

ஆங்கிலேயர் ஆதிக்கத்தில் அடிமைப்பட்டு கிடந்தபோது அச்சத்தால் வெள்ளைக்கார துறைகளுக்கு சாமரம் வீசும் பேடிகளாய் பேச்சிலும், நடிப்பிலும் கண்ட நடிப்புச் சுதேசிகளை அடையாளம் காட்டி ‘இளிவரல்’ இகழத்தக்க வருத்தத்தை வெளிப்படுத்துகிறார்.

“நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறமுமின்றி
வஞ்சனை சொல்வாரம் கிளியே!
வாய்ச்சொல்லில் வீரரடி”

(பாரதியார் கவிதைகள், நடிப்புச் சுதேசிகள், பா.எ.1)

என்ற பாடலில் ‘இளிவரல்’ சுவையை வெளிப்படுத்துகின்றதைக் காணமுடிகின்றது.

பாஞ்சாலி சபதத்தில் பாஞ்சாலி நீதி கேட்டு அழுகிறாள். வேதனை பொறுக்காத வீமன் மருட்கையோடு வெகுண்டெழுகிறான்.

“நாட்டெயல்லாம் தொலைத்தாய் அண்ணே
நாங்கள் பொறுத்திருந்தோம்
மீட்டும் எமையடிமை செய்தாய்
மேலும் பொறுத்திருந்தோம்
துருபதன் மகளைத் திட்டத்
துய்மனுடற் பிறப்பை
இருபகடை யென்றாய் ஐயோ
இவர்க்கடிமை யென்றாய்”

(பாரதியார் கவிதைகள்,
பாஞ்சாலி சபதம், பா.எ.279, 280)

பொறுப்பாய் இருப்பாய் என்று உன்னிடம் நாட்டை ஒப்படைத்தோமே. ஆனால் என்னாயிற்று? என்று சொல்ல முடியாத துயரத்தை வெளிப்படுத்துவதாக வீமனின் வெகுண்டு எழும் புலம்பல் மருட்கை சுவையாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

“இது பொறுப்பதில்லை தம்பி
எரிதழல் கொண்டு வா
கதிரை வைத்திழந்தான் அண்ணன்”

(பாரதியார் கவிதைகள்,
பாஞ்சாலி சபதம், பா.எ.281)

என்று வீமன் வெகுண்டெழும் இடத்தில் வெகுளி சுவை வெளிக்காட்டப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

வண்டிக்காரன் பாட்டில் அண்ணன், தம்பி உரையாடலில் அச்சம் சுவை மேலோங்கி இருப்பதைக் காண இயலுகிறது.

“காட்டுவழிதனிலே அண்ணே
கள்ளர் பயமிருந்தால்? என தம்பி கேட்கிறான்
எங்கள் வீட்டுக் குலதெய்வம் தம்பி
வீரம்மை காக்குமடா?”

(பாரதியார் கவிதைகள், வண்டிக்காரன் பாட்டு, பா.எ.1)

என்று அண்ணன் கூறுகிறான்.

நாணம் என்பது பெண்மைக்கு அழகு. அக்காதலனைக் கனவு காணும் மங்கை அவள் நாணத்தின் வெளிப்பாடாய்க் கனவில் உவமையில் வெளிப்படுத்துகிறாள்.

"எவனோ
என்னகம் தொட்டுவிட்டான்
வினவக் கண் பிழித்தேன் சகியே
மேனி மறைந்துவிட்டான்
மனதில் மட்டிலுமே புதிதோர்
மகிழ்ச்சி கண்டதடீ"

(பாரதியார் கவிதைகள்,
கண்ணன் என் காதலன் -1, பா.எ.1:5)

என பெண்களின் நாணத்தை உவகையில் எடுத்துக் காட்டுவதை அறியமுடிகிறது.

பெருமிதம்

மக்களின் செயலால் குடும்பமும், நாடும் உவகை கொள்ள வேண்டுமாதனால் நம்பிக்கை வேண்டும். சுதந்திரம் கிடைத்தால் எப்படி இருக்கும் என்று உவகையில் பாரதி ஆனந்த களியாட்டமாய்

"ஆடுவோமே பள்ளு பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று"

(பாரதியார் கவிதைகள்,
சுதந்திர பள்ளு, பா.எ.1)

என்று பெருமிதச் சுவையைக் காட்டுகின்றது.

சுதந்திரப் பள்ளுவில்,

"நாம் இருக்கும் நாடு நமது என்பது அறிந்தோம் இது
நமக்கே உரிமையாம் என்பதறிந்தோம் இந்தப்
பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம் பரி
பூரணனுக் கேயடிமை செய்து வாழ்வோம்"

(பாரதியார் கவிதைகள்,
சுதந்திர பள்ளு, பா.எ.1:5)

என்ற பாட்டில் ஏற்றத்தாழ்விலா சமூகம் அமைய நடுவுநிலைமையே அவசியம் என்று பாரதி பாடுகிறார்.

நாட்டுப்புற பாடல் மெட்டில் அமைந்த கவிதைகள்

படித்தவர்கள் மட்டுமல்ல பாமரர்களும் எளிதில் படிக்கத்தக்க வகையில் எளியமுறையில் பாடியுள்ளார். அப்பாடல்களில் நாட்டுப்புறப் பாடல்களின் தாக்கத்தை அறியமுடிகிறது. சிந்து, கண்ணி, கும்மி, தெம்மாங்கு ஆகிய படிவங்கள் பாரதியாரால் சிறப்புடன் பாடப்பட்டன. எட்டையபுர அரசவையினர் ஒருமுறை பாரதியிடம் காவடிச் சிந்து பாட முடியுமா என்று வினவ காவடிச் சிந்து தோன்றி வளர்ந்த காலத்தில் அண்ணாமலை ரெட்டியா பாடிய "என்னடி நான் பெற்ற மங்கை இளநங்கை விடல் சங்கை" என்ற மெட்டமைப்பில் பாரதியாரும் பாடினார். அப்பாடல்தான்,

"பச்சைத் திருமயில் வீரன் அலங்காரன்
கௌமாரன் - ஒளிர்
பன்னிரு திண்புய பாரன்"

(மகாகவியும் இசைஅரசியும், ப.285)

எனத் தொடங்கும் பாடலில் காவடிச்சிந்து அமைப்பைப் பின்பற்றி உள்ளார். நொண்டிச்சிந்து என்னும் அமைப்பிலும்

"நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த
நிலைகெட்ட மனிதலை நினைந்துவிட்டால்;
அஞ்சி யஞ்சிச் சாவார் - இவர்
அஞ்சாத பொருளில்லை அவனிலே"

(பாரதியார் கவிதைகள்,
பாரத ஜனங்களின் தற்கால நிலைமை, பா.எ.1:1)

என்று பாடியுள்ளார். பெண்கள் கும்மியடிப்பது, ஆடிப்பாடுவது சிற்றூர்ப்புறங்களில் வழக்கமாக உள்ளது. இக்கும்மியடிக்கும் இசையைப் பாரதியார் பயன்படுத்தி பெண்கள் விடுதலையைச் சிறப்புடன் பாடியுள்ளார்.

"கும்மியடி தமிழ் நாடு முழுவதும்
குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி
நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோ மென்று கும்மியடி"

(பாரதியார் கவிதைகள்,
பெண்கள் விடுதலைக்கும்மி, பா.எ.1)

'புதிய கோணங்கி' என்ற தலைப்பில் நாட்டுப்புறப் பாடலை நினைவுப்படுத்துகிறது.

தொகுதி-2 பதிப்பு-1 மார்ச் 2022 | E-ISSN: 2583-0449

பாரதி ஓர் இசைக்கவி. பொருளுக்கேற்ப இசைப்பதில் அவர் ஒரு சிகரம். பாடல்கள் பலவற்றை இசைப்பாடல்களாகவே படைத்துள்ளர். அப்பாடல்களுக்கு இராக தாள இசை உருக்களையும் அமைத்துள்ளார். கிளிக்கண்ணி, ஆனந்தக்களிப்பு ஆகியவற்றிலும் பாடியுள்ளார்.

"தாயின் மணிக்கொடி பாரீர் - அதை
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்"

(பாரதியார் கவிதைகள்,
தாயின் மணிக்கொடி பாரீர், பா.எ.1)

என்ற கொடி வணக்கப்பாடல் ஆனந்தக் களிப்பு மெட்டில் 11 பாடல்களுடன் அமைந்திருந்தது. இதே போல் தமிழ்த்தாய் என்ற தலைப்பில் பாடலும், வந்தே மாதரம் என்று தொடங்கும் பாடலும் தாயுமானவரின் ஆனந்தகளிப்பில் அமைந்துள்ளன.

அவ்வாறே கோபால கிருட்டிண பாரதியார் நந்தனார் சரித்திர மெட்டமைப்பைப் பின்பற்றிப் பாரதியார் இசைப்பாடல்களைப் படைத்துள்ளமையை அறியமுடிகிறது.

"தொண்டு செய்யும் அடிமை உனக்கு
சுதந்திர நினவோடா"

(பாரதியார் கவிதைகள்,
தொண்டு செய்யும் அடிமை, பா.எ.1)

"வீரசுதந்திரம் வேண்டி நின்றார் - பின்னர்
வேறொன்று கொள்வாரோ"

(பாரதியார் கவிதைகள்,
சுதந்திர பெருமை, பா.எ.1)

"ஓய் திரகரே நம்ம சாதிக் கருக்குமோ?
செய்வது சரியோ, சொல்லும்"

(பாரதியார் கவிதைகள்,
நம்ம ஜாதிக்கு அடுக்குமோ ... பா.எ.35)

"சொந்த நாட்டில் பிறர்கடிமை செய்தே
துஞ்சிடோம் இனி யஞ்சிடோம்"

(பாரதியார் கவிதைகள்,
தேசபக்தர் சிதம்பரம்பிள்ளை மறுமொழி, பா.எ.1)

இவ்வாறாக மேற்கூறிய பாடல்கள் அனைத்தும் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை மெட்டில் அமைந்துள்ளதைக் காண முடிகிறது.

பாரதியும் பிற மேனாட்டுக் கவிஞர்களும்

பாரதியை மேலைநாட்டு கவிஞர்கள் ஷெல்லி, பைரன், கீட்சு, வெட்சுவோர்த், ஷேக்ஸ்பியர் போன்றோர்களுடனும், பெல்சியக்கவிஞர் எமில்வெர்கரேவுடனும், ருசியக் கவிஞர் மியாவ் காவ்ச்சி, துர்கன் சாததே பாகிரெவ் போன்றோர்களுடனும் பாரதியின் கவிதைகளை ஒப்பிட்டு நோக்கலாம்.

பாரதி - விட்மன்

சனநாயகக் கவியான விட்மனை நகரம் என்ற கட்டுரையில் 'மகான்' என்று பாரதி அழைக்கிறார். விட்மனைப் போன்று பாரதியாரும் கொடி வணக்கப்பாடலையும் படைத்தார். விட்மன் படைத்த இலட்சியப் பெண்ணைப் போன்று புதுமைப் பெண்ணைப் படைத்தார்.

பாரதியும் ஷெல்லியும்

பாரதி ஷெல்லி மீது கொண்ட காதலினாலே தொடக்கக் காலத்தில் தன் பெயரை 'ஷெல்லிதாசன்' என்றே மாற்றிக் கொண்டார். மலையினின்று வீசும் காற்றைப் போன்று உரிமைப் பெற்றிருக்க வேண்டுமென்று விரும்புகிறார் பாரதியார்.

"விட்டு விடுதலையாகி நிற்பாய் இந்தச்
சிட்டுக் குருவியைப் போலே"

(பாரதியார் கவிதைகள்,
விடுதலை - சிட்டுக்குருவி, பா.எ.1)

என்ற வரிகளிலே பாரதியின் ஏக்கத்தை அறியமுடிகிறது. பாரதியின் ஞானரதத்தில் ஒவ்வொரு அடியிலும் ஷெல்லியின் குரல் ஒலிப்பதைக் காணமுடிகிறது.

பாரதியும், ஷேக்ஸ்பியரும்

ஷேக்ஸ்பியர் தம்முடைய வேனிற்கால நள்ளிரவு கனவு எனும் நாடகத்தில் காதல் குறும்புகளை வெளிப்படுத்துகிறார். "காதல் வழி கரடுமுரடானது, மென்மையானது அன்று. உண்மையான காதல் என்றுமே இனிது நடந்தேறியதில்லை" என்று அவர் எழுதிய இலிசாண்டரில் கூறுகிறார். இக்கூற்று பாரதிக்குத் துணைநின்றது. "காதல் வழிதான் கரடுமுரடாம் என்பர்" என்பது பாரதியார் கூற்று. குயில்பாட்டில், குயில்பாட்டின் மீது கொண்டுள்ள பெருங்காதலை உணரமுடிகிறது.

பலவிடங்களில் தம் நாடகங்களில் ஷேக்ஸ்பியர் நாய்களைத் தாழ்வாகப் பேசுகிறார். அப்பழக்கம் பாரதியாரையும் பற்றியிருக்கிறது. தேசபக்தன் ஒருவன் ஆங்கிலேயனுக்குக் கூறும் மறுமொழியாக அமைந்த பாடலில்,

"நாங்கள் முப்பதுகோடி சனங்களும்
நாய்களோ பன்றிச் சேய்களோ"

(பாரதியார் கவிதைகள்,
தேசபக்தர் சிதம்பரம் பிள்ளை மறுமொழி, பா.எ.1:4)

என்றும் "இந்த நாய் மகனாம் துரியோதனன்" என்று கூறுவதிலிருந்து அறியமுடிகிறது.

பாரதியும் வோர்ட்ஸ்வர்த்தும்

ஒரு கவிஞனின் பண்பைக் குறித்து 'பிளேக்' என்பவர் பின்வருமாறு கூறுகிறார்.

"கையளவு மண்ணிலே உலகைக் காண்பதும்
காட்டுமலர் ஒன்றில் சொர்க்கத்தைப் பார்ப்பதும்
உள்ளங் கையில் பரம்பொருளை உணர்வதும்
ஒருமணியில் நிலைபேற்றை அறிவதும்
கவிஞனின் பண்பு"

(பாரதியார் வாழ்வியலும்,
தமிழ் ஆளுமையும் ப.எ 270)

இயற்கை விரும்பியான வோர்ட்சுவர்த் புல்லிலே ஒளியையும் மலரிலே பெருமையையயம் காண்கிறார். "புல்லை நகையுறுத்திப் பூவை வியப்பாக்கி" என்ற பாரதியின் குயில்பாட்டு வரியினைச் சான்றாகக் கூறலாம்.

பாரதியும் பைரனும்

பைரன் ஒரு கிரேக்க நாகரிகத்தின் மீது காதல் கொண்ட கவிஞன். சமுதாயம் புரையோடல்களையெல்லாம் எதிர்த்தவர். பைரனின் பாடல்கள் பாரதியாரின் இந்திய தேசியப் பாடல்களோடு ஒத்து விளங்குகின்றன.

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே
அவர் கன்னியராகி நிலாவினி லாழக்
களித்ததும் இந்நாடே"

(பாரதியார் கவிதைகள்,
தேசபக்தி பாடல்கள், நாட்டு வணக்கம், பா.எ.1,2)

இப்பாடல் வரிகள் மிகவும் ஒத்திருந்தது. பாரதியின் தேசபக்திப் பாடல்களைப் படிக்கும்போதே பைரனின் பாடல்களின் தாக்கம் இடம் பெற்றிருப்பதைக் காணமுடிகிறது.

பாரதியும், டென்னிசனும்

ஆங்கில அறிஞர் டென்னிசன் அறியாமை இருளைப் போக்கவும், சொர்க்கத்தை இம்மண்ணுலகிலே உருவாக்க விரும்பும் டென்னிசன் கண்ட காட்சியே பாரதியின் கற்பனையில் நிலைத்திருக்கிறது.

"வலிமையற்ற தோளினாய் போ போ போ
மார்பிலே ஒடுங்கினாய் போ போ போ
பொலிவிலா முகத்தினாய் போ போ போ
பொறி இழந்த விழியினாய் போ போ போ
ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா
உறுதிகொண்ட நெஞ்சினாய் வா வா வா
களிபடைத்த மொழியினாய் வா வா வா
கடுமை கொண்ட தோளினாய் வா வா வா"

(பாரதியார் கவிதைகள்,
போகின்ற பாரதமும் வருகின்ற பாரதமும், பா.எ.1,5)

என்று பாடுகிறார் பாரதி. இவ்வாறு பாரதியார் ஆங்கிலப்புலமையும் பன்மொழிப் புலமையும் பெற்றிருந்தார்.

பெண்கள் குறித்த சிந்தனை

எண்ணற்ற கவிதைகளின் மூலம் பெண்ணினத்திற்கு விழிப்பூட்டியவர் பாரதியார். நிவேதிதை அம்மையாரைச் சந்தித்த பின்புதான் பெண்களுக்கான சமுதாயம் பற்றிப் புதுமைப்பெண் படைக்கிறார்.

"மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்
தாதர் என்ற நிலைமை மாறி ஆண்களோடு பெண்களும்
சரிநிகாச மானமாக வாழ்வம் இந்த நாட்டிலே"

(பாரதியார் கவிதைகள்,
விடுதலை பா.எ.3)

என்ற பாட்டில் ஆண், பெண் சரிநிகர் வாழ்வை வெளிப்படுத்துகிறார். பெண்மையை மதிக்கும் சமூகம் அறிவிலோங்கும் என்று கூறுகின்றார்.

கற்புக் கொள்கையிலும், கற்பு நிலையென்று வந்தால் அஃது இருகட்சிக்கும் பொதுவில் வைப்போம் என்றார். மாதரார் நலத்தின் மகிழ்பவன் மகிழ்க. மாதர் கற்பழித்தலையும், மங்கையர் குலங்கெடுப்பதையும், பெண்மையை அழிப்பதனையும் போன்ற செயல்களைச் செய்பவனை, தாய்பிறன் கைப்படச் சகிப்பவனாகி நாயென வாழ்வோன் என்று இடித்துரைக்கின்றார். பெண்கள் மீது செலுத்தப்படும் பாலியல் தொல்லைக்குத் தண்டனைக்கூட மன்னிக்க முடியாத குற்றங்களாகக் கருதப்படல் வேண்டும் என்பதும் பாரதியின் கொள்கையாக இருந்ததனை அறியமுடிகிறது. இந்த நூற்றாண்டில்தான் பாலியல் வன்கொடுமைக் குற்றங்கள் அதிகரித்துள்ளன என்பது வேதனைக்குரியதாக உள்ளது.

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி"

(பாரதியார் கவிதைகள்,
பெண்கள் விடுதலை கும்மி, பா.எ.6)

என்ற பாடல் மூலம் ஆணோடு பெண் சரிநிகர் சமானமாக நிற்க வேண்டுமெனப் பெண்ணுக்கு உபதேசம் செய்கிறான். இன்று அந்தக் கனவு பலித்துவிட்டது. பெண்களும் ஆண்களோடு அனைத்துத் தொழில்களையும் திறமையாகச் செய்கின்றனர். ஆண், பெண் சமத்துவமே அறம். வாருங்கள் மாதர்களை இலட்சக்கணக்கில் விடுதலை செய்வோம் என்று அழைக்கின்றார் பாரதி.

பாரதி ஒரு உயர்ந்த சனநாயகவாதி. தமிழ்ப்பண்பினை தேசிய அளவில் பொருத்திப் பார்க்கிறார். அல்லவை எனின் அழித்துக் காத்திடுவாள் மகாசக்தி; நல்லவை எல்லாம் நாடி இன்புறுவாள் என்பதை

"நல்லறம் நாடிய மன்னரை வாழ்த்தி
நலம்புரி வாள்ளங் கள்தாய் - அவர்
அல்லவ ராயின் அவரை விழுங்கியபின்
ஆனந்தக் கூத்திடுவாள்"

(பாரதியார் கவிதைகள்,
பெண்கள் விடுதலை கும்மி, பா.எ.6)

பாரதி தாய்மொழிக்கல்வி - கொள்கை

'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்' என்று கவிஞர் பாரதியார் பன்மொழி அறிந்தவர். ஆங்கில மொழியையும்

வடமொழியையும் நன்கு அறிந்தவர். ஆங்கில மொழியிலேயே அனைத்தும் கற்க வேண்டும் என்பதும் ஏற்புடையதல்ல. "தமிழ்நாட்டில் தமிழே சிறந்திடுக" என்று கூறுவதிலிருந்து தமிழ்மொழி வழியில் கல்விப் பயிலுவதே தலைசிறந்ததாக எண்ணியதை அறிந்து கொள்ளமுடிகிறது.

பாரதியார் பள்ளிக்கூடங்களோடும், ஆசிரியர்களோடும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தாலும் எதிர்காலத் தமிழ்ச்சமுதாயம் நன்கு உருவாக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தினாலும், கல்விக் கூடங்களிலும், அக்கூடங்களில் கற்பிக்கப்படும் படத்திட்டங்களிலும் நல்லக்கருத்துடையவராகத் திகழ்ந்தார் என்பதை அவரது கட்டுரைகள் வாயிலாக அறிந்துக் கொள்ளமுடிகிறது. பள்ளிகளில் பயிற்றுவிக்கப்படும் பாடத்திட்டங்களைப் பத்து வகைகளாகப் பிரித்துக் கூறப்பட்டுள்ளன. எழுத்து, படிப்பு, கணக்கு, இலேசான சரித்திரப் பாடங்கள், பூமி சாத்திரம், மதப்படிப்பு, இராசிய சாத்திரம், பொருள் நூல், பௌதிக சரித்திரம், கைத்தொழில், விவசாயம், தோட்டப்பயிற்சி, வியாபாரம், உடற்பயிற்சி பயணம் தொடர்பான பாடங்களை நடத்த வேண்டும் என்கிறார். பாரதி கூறிய பாடத்திட்டங்கள் எல்லாம் இன்று நடைமுறையில் உள்ளன.

பாரதியின் இதழியல் பணி

இன்றைய செய்தியே நாளைய வரலாறு என்ற சிறப்புக்குரிய இதழியல் பணியை ஈடுபாட்டுடன் செய்தவர். பத்திரிக்கைகளில் தான் பாமர மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும் என்று பல கட்டுரைகள் அளித்துள்ளார்.

வங்கதேசத்தில் சுதேசு இயக்கத்தால் கவரப்பட்டு சுதேசித்துணிகள் விற்பனையில் திருமலாச்சாரியார் ஆர்வம் காட்டினார். சுதேசிய இயக்கப் பிரசாரத்தைத் தொடங்க பத்திரிகைத் தேவை என்று 'இந்தியா' என்ற பத்திரிக்கையைத் தொடங்கினார்.

தேசநலத்தின் பொருட்டு எழுந்த இந்தியா பத்திரிக்கையாளர்களுடன் பாரதிக்குத் தொடர்பு ஏற்பட்டது. சுதேசமித்திரன், சக்ரவர்த்தினி பத்திரிக்கைகளில் பாரதி பணி ஆற்றிக்கொண்டு இருந்த நிலையிலும் தம் இந்தியா பத்திரிக்கைக்கும் எழுதிக் கொடுக்கும்படிக் கேட்டார். பாரதியின் எழுத்தில் விறுவிறுப்பும் வேகமும் 'இந்தியா' இதழின் தரத்தை உயர்த்தின.

கல்கத்தா காங்கிரசு மாநாட்டில் 1906-ஆம் ஆண்டு கலந்துகொண்டு அந்நியப் பொருட்கள் புறக்கணிப்புத் தீர்மானம் நிறைவேற்றினார். அங்கு சகோதரி நிவேதிதாதேவியைச் சந்தித்தார். தூத்துக்குடி காங்கிரசு மாநாட்டில் கலந்துகொண்டார். பாலபாரதா என்ற ஆங்கில பத்திரிக்கையையும் நடத்தினார்.

தன்னுடைய தேசப்பக்திப் பாடல்களைச் சுதேச கீதங்கள் என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டார். தன்னுடைய சூரத் பயண அனுபவத்தை 1908-ஆம் ஆண்டு 'எங்கள் காங்கிரசு யாத்திரை' என்ற தலைப்பில் வெளியிட்டார். இந்தியா, பாலபாரதா ஆகிய பத்திரிக்கைகள் மீண்டும் வெளிவரச் செய்தார். 'விசயா' என்ற நாளிதழுக்கு ஆசிரியராகப் பொறுப்பேற்றார்.

அரவிந்தர் அவர்கள் 1910-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் புதுவைக்கு வந்தார். அரவிந்தர் நடத்திய 'ஆர்யா' என்ற இதழில் பாரதியாருடைய வரலாற்றை எழுதினார். 'கனவு' என்ற நூல் எழுதி வெளியிட்டார். 'கர்மயோகி' என்ற இதழ் வெளிவரச் செய்தார். 1920-ஆம் ஆண்டு சென்னைக்கு சென்று சுதேசமித்திரன் என்ற இதழுக்கு உதவியாசிரியரானார்.

நூல்கள் வெளியீடு

1908-ஆம் ஆண்டு சுதேச கீதங்கள் என்ற கவிதைத் தொகுதியை வெளியிட்டார். இதுவே இவரது முதல் கவிதைத்தொகுதி ஆகும். 1912-இல் பகவத் கீதையைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியீடு, கண்ணன்பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் முதலிய சிறுகாவியங்களை வெளியிட்டார். மாதா மணிவாசகம், 'கனவு', ஸ்வய சரிதை ஆகிய நூல்களை 1910-இல் வெளியிட்டார்.

பாரதியாரின் பாடல்களை அவரது மனைவி செல்லம்மாள் இரண்டு தொகுதிகளாக 1922-ஆம் ஆண்டு வெளியிட்டார். பரலி சு.நெல்லையப்பர் 1923-ஆம் ஆண்டு குயில்பாட்டை வெளியிட்டார். பாரதி நூல்கள் அனைத்தும் முறையாக

வெளியிட 1924-ஆம் ஆண்டு 'பாரதி பிரசுராலயம்' நிறுவப்பட்டது. பாரதி பாடல்களின் உரிமைகளைப் பாரதி குடும்பத்தாரிடமிருந்து பாரதி பிரசுராலயம் 1930-ஆம் ஆண்டு பெற்றுக் கொண்டது. பாரதியாரின் பாடல்களை ஒலிபரப்பும் உரிமையை ஏ.வி.மெய்யப்பச் செட்டியார் பெற்றார்.

பாரதியாருக்கு செய்யப்பட்ட சிறப்புகள்

பாரதியாரின் மறைவுக்குப் பின்னர் பாரதியின் பெயரில் 'சுப்ரமணிய பாரதி கவிதா மண்டலம்' என்ற இதழை 1935-ஆம் ஆண்டு பாரதிதாசன் தொடங்கினார். எட்டையபுரத்தில் பாரதியார் நினைவு மணிமண்டபம் 1948-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

1. பாரதியார் இலக்கியங்கள் 1949-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுடைமை ஆக்கப்பட்டன.
2. பாரதி பாடல்களைத் தமிழ், கன்னடம், இந்தி, மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகளில் சாகித்திய அகாடமி 1957-ஆம் ஆண்டு வெளியிட்டது.
3. 1960-ஆம் ஆண்டு பாரதி உருவத் தபால்தலை 1960-ஆம் ஆண்டு இந்திய அரசால் மகாகவி பாரதியாரின் நூற்றாண்டு விழா 1982-ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது.
4. அதன் காரணமாக கோயம்புத்தூரில் பாரதியார் பல்கலைக்கழகம் 1985-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.
5. 2007-ஆம் ஆண்டு பாரதியாரின் 125-ஆம் ஆண்டு நினைவு நாள் கொண்டடப்பட்டது.

தற்போது அவர் மறைந்தது 2021-ஆம் ஆண்டோடு ஒரு நூற்றாண்டு நிறைவடைய போகிறது. அதனை நினைவூட்டும் வகையில் பாரதியார் பல்கலைக்கழகம் தமிழ்த்துறைச் சார்பில் காணி நிலம் வேண்டும் என்ற செயல் விரைவுத் திட்டம் தீட்டப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. பாரதியின் புகழைப் போற்றும் வகையில் நிகழ்ச்சிகள், விழாக்கள், சிறப்பானத் திட்டங்கள் தீட்டப்பட்டு செயல் திறன்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மகாகவி பாரதியார் அவர்களின் தமிழ்ப்பற்றையும், மொழிப்பற்றையும், தமிழுக்குச் செய்த தொண்டையும், நாட்டுப்பற்றையும், சமூகச் சீர்திருத்தத்தையும் ஆன்மீகப்பற்றையும், இதழியல் பணியையும் என்றென்றும் நினைவிற் கொள்ள வேண்டும். யுகம் கடந்தும் தமிழும் நிற்கும், பாரதியின் தமிழும் வளம் பெறும். என்றும் சாகாவரம் பற்ற சகாப்தத்தின் ஏடுகளில் பொறிக்கப்பட வேண்டியவை.

முடிவுரை

மேற்கூறிய கருத்தமைவில் கட்டுரை கருத்துக்கள் நோக்கப்பட்டு பாரதி படைப்புகள் வழி என்றும் பாரதி காலம் கடந்தவன், காலங்கள் கடந்தாலும் பாரதியின் சகாப்தம் தொடரும் என்பதைக் காட்டுகிறது.

துணைநூற்பட்டியல்

1. **பாரதி நூல்கள் (காவியங்கள்),** ஸ்ரீ.சி.சுப்பிரமணிய பாரதி, பாரதி பிரசுரலாயம், திருவல்லிக்கேணி, சென்னை. பதிப்பு : 1993
2. **மகாகவியும் இசைப் பேரரசியும்,** முனைவர் மு.கலைவேந்தன், (தொகுப்பாசிரியர்) தமிழ் ஐயா கல்விக்கழகம், அவ்வைக்கோட்டம், திருவையாறு - 613204. பதிப்பு : **ஜூலை** 2017
3. **பாரதியார் இனி ஒரு விதி செய்வோம்,** முனைவர் மு.கலைவேந்தன், (தொகுப்பாசிரியர்) தமிழ் ஐயா கல்விக்கழகம், அவ்வைக்கோட்டம், திருவையாறு - 613204. பதிப்பு : ஜூலை 2017
4. **பாரதியார் வாழ்வியலும் தமிழ் ஆளுமையும்,** முனைவர் மு.கலைவேந்தன், (தொகுப்பாசிரியர்) தமிழ் ஐயா கல்விக்கழகம், அவ்வைக்கோட்டம், திருவையாறு - 613204. பதிப்பு : ஜூலை 2017
5. **பாரதியார் கவிதைகள்,** பாரதியார், இராமையா பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை - 600005. பதிப்பு : பிப்ரவரி 2013
6. **தொல்காப்பியம் (பொருளதிகாரம்),** இளம்பூரணர் (உரையாசிரியர்), திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 600001. பதிப்பு: ஜூன் 1953.